கட்டப்படவுள்ள மேம்பாலத்தை பொறுத்தவரைக்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை, கோரிப்பாளையம் சந்திப்பில் கட்டப்படவுள்ள மேம்பாலத்தைப் பொறுத்தவரைக்கும், விரிவான திட்ட அறிக்கை அடிப்படையில் நில எடுப்புப் பணிக்கு மட்டும் 165 கோடி ரூபாய்க்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை, பெரியார் பேருந்து நிலைய மேம்பாலத்திற்கு, நில எடுப்புப் பணிக்கு மட்டும் 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 295, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

295—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***52741—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 509 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 41 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 34 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 414 மற்றும் வேளாண்மை, உணவு உற்பத்தி, Hotel Management *போன்ற*

2015 செப்டம்பர் 18]

மத்திய அரசாங்கத்தினுடைய இணைவுபெற்ற கல்லூரிகள் 15, ஆக மொத்தம் 509 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற திருவண்ணாமலை மாவட்டத்தில் 20 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதில், அரசு கல்லூரிகளாக செய்யாரிலும், திருவண்ணாமலையிலும் 2 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், போதிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, புதியதாக பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டிய ஒரு நிலை அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, நூறு கோடி இந்திய மக்களின் எதிர்காலமாக, அனைத்து முதலமைச்சர்களுக்கும் முதலமைச்சராகப் பரிணாமம் பெற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும் மிக்காரும் இல்லாத, ஒப்பற்ற ஒரே முதலமைச்சராகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருவதால், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர முடியாவிட்டாலும், மாணவியரின் நலன் கருதி, ஒரு மகளிர் கலைக் கல்லூரியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொன்மனச் செம்மலின் புகழ் வடிவாகத் திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று அமைத்துக் கொடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டு அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி இல்லை என்று சொன்னாலும், அங்கே ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிர் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 38 கல்லூரிகளில், 2 கல்லூரிகள் மகளிருக்கென தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

தமிழகத்திலே இருக்கக்கூடிய 74 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 21 கல்லூரிகள் மகளிர் கல்லூரிகளாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள், பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் மற்றும் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஆகிய இடங்களில் மகளிர் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 30 சதவிகித இடங்கள் மகளிருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும் மீண்டும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை, தொகுதி மக்களின் சார்பாகக் கூறி அமர்கின்றேன்.

2015 செப்டம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகரில் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இருக்கின்றது. ஆனால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. பொள்ளாச்சியில் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. ஒரு நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவர்கள் மட்டும்தான் படிக்கிறார்கள். 60-க்கும் மேற்பட்ட வகுப்பறைகள், போதுமான இட வசதி என அனைத்தும் கொண்டுள்ளது சமத்தூர் ராமையங்கார் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி. இப்பள்ளியில் இருக்கிற மாணவர்களை மற்றொரு நகராட்சி பள்ளியிலே சேர்த்துவிட்டு, அந்தக் கட்டடத்தை முழுவதுமாக அரசுக் கல்லூரியாக மாற்றித் தருகிற பணியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், பொள்ளாச்சியிலே கல்லூரி கட்டுவதற்கு இடம் இருக்கிறது; ஆகவே, கல்லூரி கட்ட முடியுமா, அரசு முன்வருமா என்ற ஒரு கேள்வியை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு கடந்த நான்காண்டுகளில் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிப் படிப்பு முடித்து கல்லூரியில் சேருகின்றவர்களுடைய எண்ணிக்கை விகிதத்தை இந்தியாவிலேயே 42.8 சதவிகிதமாக உயர்த்திய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2015 செப்டம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால், கிராமப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நிலம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், தொடரும் செலவு என்ற வகையில் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளம் போன்றவற்றிற்கு 95 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவு என்ற அடிப்படையில் கட்டடம் கட்டுவதற்கு, கணினிகள், மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாயும் ஓர் ஆண்டிற்குத் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 296, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

296—

நியாய விலைக் கடை

***49405—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகராட்சி 18, 19, 20 மற்றும் 21 ஆம் வார்டுகளில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசின் விதிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில், இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகராட்சி 18, 19, 20 மற்றும் 21 ஆகிய